IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | | 20/2023 |
| | | P/W's | | **PW1** |
| | | | | |
| NAME | S. வெண்ணிலா | CASTE | | |
| W/O | சிலம்பரசன்(late) | RELIGION | | **இந்து** |
| VILLAGE | கள்ளிவேலிப்பட்டி | CALLING | | |
| TALUK | **வாடிப்பட்டி** | AGE | | **51** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 09.09.2025**

**3 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் சிலம்பரசன் என்பவரின் வாரிசு சான்றிதழ் கேட்டு தாக்கல் செய்த மனு எதற்காக வருவாய் அதிகாரிகளால் திருப்பப்பட்டது என்றால் வேறொருவரும் வாரிசு என்று மனு தாக்கல் செய்திருந்ததால் நீதிமன்றத்தில் பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு மனுவை திருப்பிவிட்டார்கள். வா.சா.ஆ.6 ஆவணத்தில் சிலம்பரசனுக்கு 2 மனைவிகள் என்றும் நீதிமன்றத்தில் வாரிசு சான்றிதழ் பெற்றுக்கொள்ளுமாறு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. வா.சா.ஆ.6 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 2 வது மனைவி என்பவர் காவேரி என்ற சர்மிளா என்றால் எனக்குத்தெரியாது. வா.சா.ஆ.6 ஆவணத்தில் இறந்து போன சிலம்பரசனுக்கு காவேரி என்ற சர்மிளா என்பவர் 2 வது மனைவி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் பிராதில் குறிப்பிட்டுள்ள எனது முகவரியான கதவு எண் 2/119 என்ற வீடு எனது கணவர் எனக்கு கொடுத்தது என்றால் சரியல்ல, அது எனது கணவரின் பூர்வீக சொத்து.

3. வா.சா.ஆ.5 எனது கணவரின் இறப்புச்சான்றிதழில் கதவு எண் 4/1A என்ற வீட்டில் இறந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 இறப்புச்சான்றிதழில் உள்ள முகவரியும், எனது பிராதின்படி 1,2,3 பிரதிவாதிகளின் முகவரியும் ஒன்றுதான் என்றால் சரிதான். எனக்கு 1991 ம் வருடம் திருமணம் செய்து 1995 ம் வருடம் 2 ம் வாதி பிறந்தார் என்றால் சரிதான். அதற்குப்பின்பு சிலம்பரசனுடன் எனக்கு கருத்து வேறுபாடு ஏற்பட்டு நீண்ட காலமாக பிரிந்து வாழ்ந்துவந்தோம் என்றால் சரியல்ல.

4. காவேரி என்ற சர்மிளா சிலம்பரசனின் 2வது மனைவி என்று 5ம் பிரதிவாதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட நிலையில் அவரை வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சிலம்பரசனுக்கு நான் மட்டும்தான் மனைவி, 2வது மனைவி கிடையாது. 3ம் பிரதிவாதிக்கு தற்போது 14 வயது என்றால் சரிதான். 1, 2,3 பிரதிவாதிகள் சிலம்பரசனுக்கும் காவேரி என்ற சர்மிளாவிற்கும் பிறந்தவர்கள் என்றால் சரிதான்.

5. 2000ம் ஆண்டு சிலம்பரசன் மற்றும் 8 நபர்கள் மீது திருப்பரங்குன்றம் மகளிர் காவல்நிலையத்தில் வரதட்சணை புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி புகாரனாது மதுரை 7வது நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் CC No 35/2001 என்ற வழக்காக நடைபெற்று வருவதாக என்றால் சரியல்ல. நாங்கள் சமாதானமாகிவிட்டோம். மேற்படி வழக்கில் அனைத்து எதிரிகளும் விடுதலை செய்யப்பட்டார்கள் என்றால் எனக்குத்தெரியாது. மேற்படி வழக்கில் காவேரி என்ற சர்மிளா 9வது எதிரி என்றால் எனக்குத்தெரியாது.

6. 26.06.2001ம் தேதி எங்கள் கிராமத்தினரிடம் பேசி எங்கள் குலவழக்கப்படி விவாகரத்து ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரியல்ல. மேற்படி விவகாரத்துப்படி 2ம் வாதிக்கு 75,000 ஜீவானம்சம் கொடுத்தும் நாங்கள் குடியிருந்த வீட்டை எனத பெயருக்கு எழுதிக்கொடுத்தும் விவாகரத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி விவாகத்தின் அடிப்படையில் CC No 35/2001 வழக்கையும் நான் தாக்கல் செய்த HMOP No. 86/2001 என்ற வழக்கையும் வாபஸ் பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல.

7. 2001க்கு பிறகு எனக்கு சிலம்பரசனுக்கு பேச்சு வார்த்தை இல்லை என்றாலும் அவர் சர்மிளாவுடன் தான் சேர்ந்து வாழ்ந்தார் என்றாலும் சரியல்ல. எனது வாக்காளர் அடையாள அட்டையிலும், குடும்ப அட்டையையும் பார்த்தால் சிலம்பரசன் என்னுடன் சேர்ந்து வாழவில்லை என்று தெரியவரும் என்றால் சரியல்ல. என்னுடன் குலவழக்கப்படி சிலம்பரசன் விவாகரத்து செய்துவிட்டு சர்மிளாவுடன் வாழ்ந்த காலத்தில்தான் 1, 2,3 பிரதிவாதிகள் பிறந்தார்கள் என்றால் சரியல்ல.

8. நான் சிலம்பரசனுடன் விவாகரத்து செய்துகொண்டதால் நான் அவரது வாரிசு இல்லை என்றாலும், 2வது வாதி, 1 முதல் 3 பிரதிவாதிகள், சர்மிளா ஆகியோர்கள்தான் வாரிசுகள் என்றால் சரியல்ல. வழக்குப்பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல.

**4, 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. இறந்துபோன சிலம்பரசனின் தகப்பனாரை வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனது மாமனாரின் வழக்கில் தரப்பினராக சேர்க்காததால் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/-M.P.Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி